# பத்ரி உரையாடல்!

## தை வருஷப் பிறப்பு!

## ஜனவரி, 2010

## இதழ் 2





**பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா**



# பக்தி

## உரையாடல்!

## தை வருஷப் பிறப்பு!


ஜனவரி, 2010

இதழ் 2

# பொருளடக்கம்

1. சேவையும் ஆசியும் ----------------------------------------------51

எல்லாம் நீ!



நாம் எண்ணியது நடக்கவில்லையே. நாம் கேட்டது கிடைக்கவில்லையே என கர்மாவின் சிந்தனை வைத்தால் அது வியாபாரமே! அது மாற்றத்தால் தடுமாற்றமும் ஏமாற்றமும் ஆகி மனம் சோர்வடையும். நலமே என ஏற்றால், ஆனந்தம் நிறையும்.

51

அவர் சற்று ஆழ்ந்து சிந்தித்தார். அங்கு மற்றொருவர் எடுத்துரைத்தார்.

மற்றோர் மகாத்மா :- ஆமாம் மகரிஷி! இந்த பாபா! சொல்வதும் சரிதான். நாம் அனைவரும், அகங்காரம்! அதிகாரம்! ஆதிக்கம்! இவைகளைத் தான், கண்டோமே தவிர, அமைதி! அடக்கம்! ஆனந்தம்! அடைந்தோமா? எனப் பார்த்தால் இல்லையே. ஆனாலும், பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே, சில அனுபவ மகான்கள் நமக்கு இதமாக போதித்தனர். ஆனால் நாம் அனைவரும், ஆக்கம் வேண்டுமே என்று! அமைதி வேண்டாம் என இருந்து விட்டோம்.

குறிப்பு :- ஆக்கம் :- செய்யும் தொழிலில் வேகம். அதனால் போட்டிப் பொறாமை. கடின உழைப்பு நம் மூலதனம். என செயல் படுதல். ஆக்கமாகும். வே

அமைதி :- பொறுமை! நிதானம்! பணிவு! இவற்றுடன் தற்காவல் சக்தி. ஓர் நாமரூபமற்ற ஸ்ரீபகவானிடம் சர்வார்ப்பணம். அமைதியாகும்.



நம்பிக்கை! (52)
என்பது:-
நாமரூப ஜகஜீவ
இயக்கத்திலும்,
ஒன்றை ஒன்று!
நம்பினால் தான்,
வாழ்வு நலமாக அமையும்.
இரமங்கள் முறையும் நம்பவில்லையானால்,
வாழ்வே அர்த்தமற்ற, அனர்த்தமாகிவிடும்.

இதன் உட்கருத்து:- ஸ்ரீபகவன் நாமாவை!
எண்ணி! பின் கர்மாவை எண்ணு. கர்மாவின்
முடிவை, **நலம்!** என ஏற்றுக்கொள். அங்கு
பலனை! எதிர் பார்த்தால், இன்ப துன்பம் தோன்றும்
எல்லாம் நலமே! என ஏற்றால், ஆனந்தம் தோன்றும்.
நாம் அனைவரும், கண்டிப்பு & கண்டிப்பு!
இருந்தால் தான், அனுபவம் பெறமுடியும் என,
எண்ணுகிறோம். ஆகவே, அவர்கள் வார்த்தையை
கையாளாதவன்! சோம்பேறி! ஊர்
உலகிற்கு உதவாதவன்! சாதனை, சாதனை,
என கூறிக் கொண்டு சும்மாஇரு! சும்மாஇரு!
என சொல்கிறோம். இவர்களுக்கு அவசியமில்லை
என, அவர்களை அவசியம் செய்து விட்டோம்.
அது இன்று, இப்பாபாவினால் உணர்கிறோம்.
இவ்வளவு காலமும் (பலஆயிரம் வருஷங்களும்)
வீண் காலம் கடத்திவிட்டோம் என்பதை உணர்கிறோம்



பக்தி நியமம்! (53)

ஓ! ஸ்ரீ பகவானே!

நம்பியே ஆகவேண்டும்

ஸ்ரீ பகவத் நம்பிக்கை
இல்லையென்றால், அவன்
ரஜோ/ தமஸ்/ குணங்களில், ஆட்பட்டு இக்கட்டிலும்
தெய்வீகத்திலும், சரியான பாதை தெரியாமல், துஷ்டனாகி விடுவான்.

வைத்தியம்: ஏந்த ஓர் சாதனையாளன்/ தான் செய்த தவறை, உணர்ந்து, ஸ்ரீ பகவானிடம் கண்ணீர் விடுகிறேன்! இனி இவ்வாறு, நடைபெறாமல் இருக்க, கிருபை செய்வாய் என, ஸ்ரீ பகவானிடம் மனம் உருக முறை ஒரு ஒன்றோ முறையிடுகிறேன்! அவன் மீண்டும், அத் தவறை செய்யாதிருக்க, அவன் அருள் கிட்டும். பிராயச்சித்தமாக, அப்படி அத் தவறு செய்ய நேர்ந்தாலும், மாயாவும்/ மனமும்/ ஒன்றுபடியால்

(A) முன்பின் மாற்றவாம். அதனால்,


(B) வலிமை/ கடுமை/ குறையவாம். அதனால்,

(C) ஆகாமிய கர்மா சேராமலிருக்கவாம். அதனால்,

(D) பிராரப்த கர்மா, சுககர்மாவாக மாறவாம்.

இது ஸ்ரீ ஆதி மஹான்களின்/ ஸ்வய அனுபவமாகும்.

ஓர் யோகி:— உமக்கு ஆதாரம்/ எது என்பதை, சற்று தெளிவாக கூறுங்கள் பார்ப்போம்? அதாவது இயக்கநிலை ஸ்ரீ பகவான் மீதும், இயக்கமற்ற பாதத்தின் மீதும், எதை ஆதாரமாக நம்புகிறீர்?




பரநிலையில்! (54)

அத்வைதத்தில்

ஸ்ரீ ஸத்குரு அருளும்,
உபதேசகருத்தில்,
நம்பிக்கையால்,
வைராக்கியம் கொண்
டால் அவசியம் அவன், ஜீவன் முக்தனாவான்.
இல்லையெனில், ஜனனமரண பிணியாளன்
ஆவான்.

வைத்தியம்:- தூலம் கர்மா நிலையில் இயங்குவதால்
அதன் இயக்கத்திற்கு, ஸ்ரீ பகவான் ஒருவனே.
அனைத்தும் (எல்லாம்) மனத்தை உணர்ந்த நிலையில்,
அபேத திருஷ்டியால் இருப்பது ஒன்றே. அங்கு,
தன்னை ஓர் ஜீவனாக பாவனை செய்தால் அது துவைதம்.
" இயக்க ஸ்ரீ பகவானாக! " " அது விசிஷ்டாத்வைதம்.
" இயக்கமற்ற அதுவாக! " " அது அத்வைதம்.
இதை நம்பும் நிலையில், ஆரம்பம் **மனம்** ஆகும்.
பின் அனுபவ நிலையில், உணரும் போது **அறிவு** ஆகும்.
நாம் அதுவாகவே, ஆன நிலையில் **பேரறிவு** ஆகும்.
இம்மூன்றின் ஆதார உணர்வாக இருப்பது,
**யாம்** ஸ்ரீ பகவானுமல்ல. எந்த ஸ்ரீ மஹான்களுமல்ல.
**அதுவாகவே** இறங்கி வந்த **ஒன்றும்**
அதுவேயாம். யாமே அது! இது வாக்கியம்.



பேரறிவு என்றும் (55)
யாம் பிரம்மம் என்ற
பெயரளவில்,
அதாவது அந்த
நாமாவை உடைய
நாத இருக்கும் வரையில்
பேரறிவே. அவ்
உணர்வும் கெட்டு, அதுவாக
இருக்கிறோம் என்ற வாக்கும் கெட்டு, மஹாமௌன
நிலை பெற்று பூர்ணப்ரம்மானந்த சகஜநிஷ்டை பெறுவதே
பேரறிவும் அல்ல. சொல்லவொண்ணாதது.

மற்றோர் யோகி:- ஆமாம் பாபா! அநுபவ
ஸ்ரீமஹான்களின் வாக்கை கேள்விப்பட்டிருக்கிறேன்.


(A) எவனும் கர்மாவை துறக்க இயலாது.
துறக்க முடியாது. (அது உடலோடு பின்னிப்பிணைந்து
ஒன்றியது.)

(B) கர்மாவை துறக்காமல் முக்தி இல்லை.
என்பதாகும். இவ்விரண்டிலும், சற்று விபரமாக,
விளக்கம் கொடுத்தால், நலம் பெறுவோம்.

மைத்ரியம்:- ஓம் அருமை மஹாத்மாவே! இதற்கு
ஸ்வயஞானானுபவ நூலில் (ஸ்ரீமத் பிரம்ம கீதையில்)
ஓர் வார்த்தை உண்டு. அது யாதெனில்?
நிகில (அகில) வித, கர்மத்தையும் சிதைத்தையுற்று
போனதென்று, நிதாகன் தம் அநுபவத்தில் கூறி
இருக்கிறான். இதை அநுபவமாக உணர வேண்டும்.

இங்கு (நிகிலம் என்றால் எல்லா நாமரூபமொன்றும் அடங்கும்
அகிலம் " உலகங்கள் அனைத்தும் அடங்கும்.
ஒட்டுமொத்தத்தில், நாமரூப, ஜகஜீவ, சொரூபங்கள் அனைத்தும் அடங்கும்.





மனதின் கற்பனை (௫௦)

நாமரூபத்தால்

குணங்கள் இணைகிறது.

அக்குணங்களால், வினை

பிணைகிறது. அதேமனம்

அனைத்து, நாம ரூபங்களும்

**மன** தானே? மனிதனுக்கு அன்னியம் எதுவும் இல்லையென உணர்ந்தால், கர்மா நாசமாகும்.

எல்லாம் மனமே என உணர்ந்தால் கர்மாவிலிருந்து விடுதலை! கர்மா? மனதின்

வைத்தியம் :- அனைத்து நாம ரூப, ஜக ஜீவ, தேகீரம் (நாம ரூபம்) அனைத்தும், கர்மாவால் (புண்ணிய பாபத்தால்) பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கின்றன. அப்பிணைப்புகள், அனைத்தும், மனதின் பிணைப்பாகும்.

" " மனோவியாபார " .

" " மனதின் இன்ப துன்ப " .

" " மனதின் ஸங்கல்ப விகல்ப " .

தேகத்தால் விருப்பு வெறுப்பும்!
விருப்பு வெறுப்பால், குற்றம் குறையும்!
குற்றம் குறையால், விகார விவகாரமும்
விகாரகாட்சி! அதனால் விவகாரமிகுதி.


" " தேவை, ஆசை! ஆசை, தேவையின் " .

" " கொடுக்கல் வாங்கல்! லாபநஷ்ட " .

" " சொந்த, பந்த, பாச, (விஷ உறவு)களின் " .

" " ஜனனமரண படுகுழியின் " .

இவை அனைத்திற்கும் **மனமே!** மூலகாரணம் ஆகும்.




ஸ்ரீ பகவானின் மாயா, (57)
கர்மாவை தானே
இயக்குகிறது என்பதை,
சாந்த சக்கு! துகாராம்!
கபீர்! ஏகநாத் நாமதேவ்! ஸூர்
வைத்தியம்! போன்ற
வர்க்கரிடம் மாயா எப்படி
காரியம் பார்க்கிறது என்பதே உதாரணம்
ஆகும். உங்கள் நம்பிக்கையே, பூவுதனம் ஆகும்.

வினையே தாபம்! தாபமே வினை! இப்படி கர்மாவால்
தாபம் உண்டாகுவதால், கர்மாவை எவரும் விலக்கவோ
மறுக்கவோ! அழிக்கவோ! முடியவே முடியாது. ஆனால்
இருநிலைகளில் கர்மாவை, செயல் இழக்கச் செய்யலாம்.

(1) சர்வார்ப்பணம்:- எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்!
எல்லாம் உனக்கே! என்ற நிலையில், ஸ்ரீ பகவானிடம்
நிர்ஜீவமாக விடும்போது, கர்மா செயல் இழக்கிறது.
ஆனால் கர்மா நடைபெறும். அங்கு தாபத்தையும்!
மனதையும்! பாதிக்காமல், கர்மா நிறைவும் முடிவும்
பெறும் என்பது, ஸத்தியமாகும்.

(2) அனைத்து கர்மாவின், இயக்கங்களும், திட்டமிட்டு
முன்னதாகவே; பாரப்சுஷ தோஷமில்லாமல்
தயாரித்து முடித்த ஓர், நாடகம் ஆகும் என, ஸத்திய
மாகவே, உணர வேண்டும். இந்த உணர்வு, ஸத்திய
மாகும் போது, இறை உணர்வோடு, மனதை விட்டு
பிடிக்கலாம். ஜக உணர்வு தணிப்பாக கூடாது.



பொறுமையும்! (58)
இறை & குரு
உணர்வும் மேலோங்கும் போது, கர்மாவின்
பாரம்! தோற்று வழியில்
கர்மாவில் எதிர்பார்ப்பு
என்ற அழுத்தம், அனுபிரமாணம் இருக்கா வும்
பொறுமையும்! இறை குரு உணர்வும்! இராது.

இவ்விரு நிலைகளிலும், கர்மா செயல் இழக்கும் போது


**மன அழுத்தம்!** குறைந்து குறைந்து நின்று விடும்.

**தலைசிரமங்களும்!** " " .

குறிப்பு:- இறை உணர்வோடு மனதை விட்டுப்பிடிக்கலாம்:-

இறை உணர்வு, மேலோங்கும் போது, தாவகர்மாவை பரிபக்குவமான மாயா தானே இயக்க ஆரம்பித்து விடுகிறது.

மாயாவும் சார்ந்திருந்தால், தாவகர்மாவை இயக்கும் போது, மாயாவின் மகனை மனம்! இயல்பாகவே மெள்ள மெள்ள! மெள்ள மெள்ள! மெள்ள மெள்ள! தம் எண்ணங்களை! இழக்க ஆரம்பித்து விடுகிறது. மனதின் எண்ணங்கள், குறையும் போது, இயல்பாக கர்மாவின் வேகமும், குறைந்து விடுகிறது. அந்நிலையே கர்மாவில் **சரத்தை!** அற்ற நிலையாகும்.



மனமே கர்மாவை (59)
கேட்டு வாங்கி
வந்தது என சொல்லலாம்.
ஆனால் இங்கு உள்ள
பழக்க வழக்க தோஷம்
நாமரூப மயக்கம்
சொந்தபந்த பாசபிணைப்பு
இவை மூன்றும், இம்மனதுக்கு வேக! மோஹ! லோப
என்னும், போதையை ஊட்டி விடுகிறது.


(A) கர்மா என்பது, விதிக்கப்பட்ட ஒன்றாகும். இதை உபசாரவசனமாக சொல்வது என்றால்? நாம்! கேட்டு வாங்கி வந்த, ஒன்றுதான் கர்மா. ஆகவே அது, சுகமான கர்மாவே.

(B) கர்மாவின் பலன், எதிர்பார்க்கும் தன்மையால், நாமரூப, ஜகத்தின், மாற்றமும்! அம்மாற்றத்தால் தடுமாற்றமும் உண்டாகி! மனம் ஏமாற்றத்தில் வீழ்ந்து விடுகிறது.

(C) இதன் காரணம், ஜீவகர்த்தத்துவமேயாகும்.

(D) இங்கு ஈச கர்த்தத்துவம்! மேலோங்கும் போது, மாயா/கை கொடுப்பதனால், மாற்றத்தை மனம்! கண்டு கொள்கிறது. அதனால் தடுமாற்றமும்/ ஏமாற்றமும்/ தவிடு பொடி ஆகிறது.

(E) அங்கு இயல்பான கர்மா, (பிராரப்தம்) சுகமாக, அனுபவிக்கப் படுவதால், மன அழுத்தம்/ இல்லாத தன்மையால், கர்மாவின் அர்த்தத்தை அற்று விடுகிறது; என்றும் கொள்ளலாம்.



① கர்மாவை எவரும் துறக்க முடியாது:- (60)
கர்மா என்ற புண்ணிய
பாவம் உடலோடு
பின்னிப் பிணைந்து
பிசைந்து ஒன்று கூடி
அனுபவித்தாக வேண்டும்.
கர்மா தொலையாது. சர்வார்ப்பணம்
ஒன்றே கர்மாவின், கடுமையை, நாசம் செய்யும்.


## கீதா வாசகம்.

கர்மா சம்பந்த வேறு
ஓ மஹாத்மாஜீ! ↑ ஒன்றை கவனிக்கவும்.
எம் ஸ்ரீ கண்ணன் சொன்ன கீதா வாசகங்களில்
கர்மா சம்பந்தமாக, சொல்லுதில் ஓர் மூன்று
மட்டும் தருகிறோம். கருத்தால் உணர்க.

① ஜீவநிலை:- யாம் இந்த ஜீவர்களுக்கு, எந்த கர்மாவும் கொடுக்கவில்லை. பிரகிருதியாகிய, மாயாவே, அனைத்தையும், அனுசமாக செய்கிறது.

② ஈசநிலை:- யாம் கர்மா வினையே, இயங்குகிறோம். யாம் கர்மா செய்யா விட்டால், இச் ஜீவர்கள் எல்லாம், கர்மா செய்யமாட்டார்கள். இவ்வுலகமே ஸ்தம்பித்து விடும்.

③ பரநிலை:- யாம் கர்மா செய்பவனுமின்றி, செய்விப்பவனுமின்றி, ஒன்பது வாசல், கோட்டைக்குள் (சரீரத்தினுள்) ஆனந்த பரனாக இருக்கிறோம். என்கிறான். இதன் கருத்தை உணர்க.



(61)

ஆனால் அது கர்மாவை, நாசம் செய்யாது.

(2) எந்த கர்மாவினாலும் ஆத்ம ஞானம் பெற முடியாது. ஆத்ம ஞானம் என்பது கொடுப்பதும், வாங்குவதும் அல்ல. அது சென்று அடையும் இடமும் அல்ல. அது நம்மை வந்து அடைவதும் அல்ல.

(1) ஜீவநிலை:- யாம் இந்த ஜீவர்களுக்கு, எந்த கர்மாவும் கொடுக்கவில்லை. பிரகிருதியாகிய, மாயாவே, அனைத்தையும், அவசமாக செய்கிறது.

விளக்கம்:- மனதால் பிணைக்கப்பட்ட, அந்த மனிதன் மட்டும், முடிந்த கர்மாவில், ஆசை & தேவை, என்ற நிலையில், ஓர் பலனை எதிர்பார்க்கிறான். அது நிறைவேறாமையினால், சந்தேக கலக்க பய துக்கத்துடன், தன் கர்மவினையால், வினைகளை தானே, தேடிக் கொள்கிறான். இதற்கு யாமும் பொறுப்பல்ல. எம்மாயாவும் பொறுப்பல்ல. நான் எனது, என்ற அவன் மனமே பொறுப்பாகும். அவன் பொறுப்பல்ல.


(2) ஈசநிலை:- யாம் கர்மாவின்றியே இயங்குகிறோம். யாம் கர்மா செய்யவில்லையாயின், இச்ஜீவர்கள், எல்லாம் கர்மா செய்ய மாட்டார்கள். இவ்வுலகமே, கர்மாவின் இயக்கம் இல்லாத தன்மையால், ஸ்தம்பித்து விடும்.



வினையிலிருந்து (62)
முழுமையாக,
நீக்கம் பெற்றுவிட்டால்
அதாவது, வினை என்ற
கர்மாவை, எனது
என்ற பிடியையிருந்தமை
விட்டுவிட்டால், அதாவது,
மனிதனின் அறியாமையின் திரை நாசமானால்
அந்த க்ஷணமே நீயே ஆத்மஞானம் என்ற,

விளக்கம்:— எம்சன் (ஸ்ரீபகவான்) என்றால், சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், என்ற முத்தொழில் (கர்மாவை) உடையவன் என்று, மனம் படைத்தோரால், பேசப்படுகிறது. ஆனால் எம்மாயாவே, அனைத்து காரியங்களையும், (கர்மாக்களையும்) குறைவின்றி, அனைத்து ஜீவ சரீரங்களையும், வைத்து செய்து முடிக்கிறது. அங்கு (அதை) யாம் செய்வதாக, பேசப்படுகிறது. அங்கு எம்மாயாவின் செயலை, சொல்லவேண்டாது. சொல்ல முடியாது, யாம் செய்வதாக, சொல்ல எம் கருணை, என்ற நிலையில்?

(A) யாம் (எம் ஆணையும்) எம் மாயாவை, ஓர் கருவியாக கொண்டு, பற்றப்படாமல் செயலாற்றுகிறோம். மகனே
(B) எம் அம்சமான நீயும், மாயாவின் மனதை, உன் வசம் வைத்துக் கொண்டு, செயலாற்றலாமே?
என் மனம் இதும் அகப்படவேண்டும்?
(மனதை உன் வசம் வைப்பது, சர்வார்ப்பணமே ஒன்றே)



ஜீவன் முக்தர்களே (63)
இருப்பாய் இது
ஸத்தியம் • வேறு
எந்த சாதனையாலும்,
புண்ணிய ஸத்திய
தர்ம / கர்மா வினையும்
ஆத்மஞானம் அடைய முடியாது.
புண்ணிய / ஸத்திய / தர்ம /
கர்மா நசிந்த இடமே, ஆத்மஞானம் / என்ற
ஜீவன் முக்தியாமே.

(C) நீயே யாம் / யாமே நீ / இது ஸத்தியம் •
(D) ஆகவேதான், எம் மாயா கர்மா செய்வதை,
யாமே / கர்மா செய்வதாக, பாவனை காட்டுகிறோம்.
ஆகவேதான், யாம் கர்மா செய்ய வில்லையாயின்
உலகமே, ஸ்தம்பித்து விடும் என்று மனம்
படைத்தோருக்காக, உபசார வசனமாக சொல்கிறோம்.
(E) நீயும் எம் போன்று, மனதை உன் வசம்
வைத்துக் கொண்டு கர்மா செய்யலாமே?
உப்பு என சொல்வதால் பத்தியம் முறியாது,
உப்பை உண்டால் தான், பத்தியம் முறியும்.
(F) கர்மா என்ன செய்யும்? கர்மாவின் பிடிப்பை
மட்டும் விடு • (உடைமை & உரிமை வேண்டாம்)
(3) பரநிலை:- யாம் கர்மா செய்பவனுமின்றி /
செய்விப்பவனுமின்றி / ஒன்பது வாசல் /
கோட்டைக்குள் / (சரீரங்களுக்குள்) ஆனந்த
மாக இருக்கிறோம்.




ஓ கர்மா முறையை யாரு நடத்தாலன்றி, ஆத்மஞானம் இல்லை:- சர்வார்ப்பணம் ஒன்றில், மட்டுமே கர்மா பரிபாகம் பெறும். பிரம்மார்ப்பணம் ஒன்றில் மட்டுமே கர்மா நாசமும்! மனோநாசமும் சாத்தியமாகும். இக்கலியில் வேறு எந்த மார்க்கத்திலும், ஆத்மஞானம் என்ற ஜீவன் முக்தி இல்லை. ஓம்

விளக்கம் :- ஒன்பது வாசல் கோட்டைக்குள்! ஆனந்த பரணை இருக்கிறோம் என்பது, ஒவ்வொரு சரீரத்திலுள்ளும்! அந்தர்யாமி! ஹ்ருதயவாஸி! மனச்சாட்சி! என்ற மூன்று நாமங்களுடன்! ஸ்ரீ பகவானாகிய **நாம்**! இருக்கிறோம் இது ஸத்தியம்.

(நாமே ஸ்ரீபகவான் என உணர்வாயாக)

நம்மை நாமே! நான். என்றல். எனது. என்ற மனத் **திரை**! கொண்டு! மூடிக்கொண்டு **மறை**! அவஸ்தையுறுகிறோம். (அறிவின் அவஸ்தையல்லவ)

மேலே கூறிய நிலையில், ஆனந்த பரணை இருக்கும் நாம்! கர்மாவின் எந்த பிணைப்புமின்றி! நாம் செய்வதும் இல்லை. செய்ய சொல்வதுமில்லை! ஆனால் வயோ! வயோ! வயோ! வயோ! வயோ! வயோ! என வறட்டுத் தவம்! யோகி கத்து வருவோமாம் நம் **மனமே**! என உணர்ந்தால் போதும்.



தேவையும் ஆசையும்
பிரவர்த்தியின் (65)
ஸ்ரீவதனமாகும்.
பிரவர்த்தி மார்க்கம்
ஜனனமரணம் ஆகும்.
நிவர்த்தியின் மார்க்கம்
ஜீவன்முக்தி அல்லவா. ஆகும்
ஜீவன் முக்தியின் வழியாகும். பிரவர்த்தி
என்பது நான் எனது என்ற

இவைகளை வைத்து உணரும் போது!

**கர்மா!** நமக்கு உரியதல்ல என உணருங்கள்.
கர்மா என்றால் தாபம்! தாபம் என்றால் கர்மா!
அது உடைமை & உரிமை யோடு **மனதால்!**
பாராட்டும் போது அது நமது உடைமையாக தோன்றுகிறது.
ஆகவே, கர்மாவில் சிரத்தை அற்றும் போகவேண்டுமா?

(A) நான்! எனதை நீக்கு! நீ! உனதாக ஆக்கு.

(B) தேவை & ஆசை! ஆசை & தேவைகளை, குறை. நிறுத்த முடியாது! நிறுத்த இயலாது.

(C) இறை ஒரு உணர்வை, பெருக்கு. மாறாக ஜட ஜீவ! உணர்ச்சியை நாசம் செய்.

(D) வாக்கில் அதி அதி அதி அதி கவனமாய் இரு. கடும்! சுடும்! கபட! கேலி! கிண்டல்! வாக்கு வேண்டாம்.

(E) ஆத்திரம், அவசரம், வேகம், இல்லாமல் கர்மாவை செய். கர்மாவின் முடிவை, தலைவணங்கி ஏற்றுக் கொள்.

(F) எல்லாம் நலமே! எல்லாம் நலமே! எல்லாம் நலமே! என எண்ணு. கர்மா சுகமாக, நடையையும் பின் முடிவையும்.



அஹங்கார அபிமான!
மமகார
ஆதிக்கமும்
வலியவந்து, செய்யும்
கர்மா ஆகும். நிவர்த்தி
என்பது ஜீவகர்த்த கர்த்தத்துவம்!

(66)

ஈசகர்த்த கர்த்தத்துவத்தால் (சர்வார்ப்பணத்தால்)
நாசமாகி ஜீவ பரிபாகம் பெறுவது நிவர்த்தி மார்க்கம்
என்பதாகும்.

இவைகளே கர்மாவில், சித்தத்தையும் போக்கும்
வழிமுறைகளாகும் என, சொன்ன நேரியில்,
அந்த யோகீஸ்வரர்! சாந்தி ஆனார். அடுத்து
இருந்த யோகி எழுந்தார். அவர் கேட்ட கேள்வியாவது

யோகீஸ்வரர் :- (1) ஹே அறிவு சொரூபமான மஹராஜ்!
உங்கள் மடலில் படிக்கையில் தான், வேலை எது?
சேவை எது? என உணர்ந்தோம். தாங்கள் கூறும்
சர்வாங்க சேவை! ஸ்வபாவ சேவை! ஆத்மபாவ சேவை!
இவை மூன்றும்! ஒருவனுக்கு, முறையாக கிட்டினால்
தான், ஆத்மஞானம் பெற முடியுமா? அல்லது
வெறுமனே " " ?

(2) ஸ்ரீமான்களின்! ஆசியால் தான் சேவை கிட்டுமா?
அல்லது சேவை செய்தால் தான், ஆசி பெறமுடியுமா?

(3) (A) ஆசி பெறுவது வாக்கின் வரமாகுமா?
(B) ஆசி பெறுபவருக்கும்! ஆசி வழங்குபவருக்கும்!
தகுதி உண்டா?
(C) ஆம் என்றால் அதன் அளவுகோல் என்ன?


எம் அன்பான மஹராஜ்! இம்மூன்று கேள்விகளுக்கும்!
எளிய முறையில்! தகுந்த நிலையில் பதில் தாருங்கள் பாபா?



பரிபாகப்பட்டவினை (67)
யானது
பிரம்மார்ப்பணத்தால்
பஸ்பமாகி நாசமாகும்
போது, அங்கு மனதுக்கு
இருந்த இடம் இல்லாமல்,
போகும். உடனே மனம்
அறிவாகவும், அந்த அறிவு
போதமாகவும் ஆகும்போது ஜீவன் முக்தி நிலையில்
பாகசாஸ்திரமானது. ஆகவே பிரவர்த்தியை அவஸ்யம் படவேண்டும்.

வைத்தியம்:- கேள்வி:- ஸர்வாங்க சேவை! ஸத்பாவ சேவை! ஆத்மபாவ சேவை! ஆகிய இம் மூன்றும், ஒருவனுக்கு முறையாக கிட்டினால்தான், ஆத்ம ஞானம் பெற முடியுமா? இவைகள் பெறமலே,
,, ,, ,, ,, ? (இதன் உட் கேள்வி? வேறு என்ன சாதனை செய்தால் ஆத்மஞானம் கிட்டும்?)

ஓம் அருமை மகனே! இது பயனுள்ள கேள்வியே. கவனம் தேவை. மற்றைய மூன்று யுகங்களிலும், (கிருதா, திரேதா, துவாபரா) இவை மூன்றும், **சேவை** என ஒன்றாகவே ஆர்ந்தி ஆனது. இக்கலியுகத்தில் மட்டும், முற்பகுதியில், இவை மூன்றும், சிறப்பாக, அமுலத்தில் இருந்தது. பிற்பகுதியில், வெகு வெகுவாக குறைந்து விட்டது. தற்சமயம் **100** ஆண்டுகளுக்குள், எங்கெங்கோ ஒன்றிரண்டு இடங்களில் நடைபெற்று வருகிறது. அதுவும் இன்னமும் **100** வருடங்களில், நின்று விடும். என தெரிகிறது. ஆனாலும்?



இதில் கூறும் (68)
ஸத் குருவின்
ஸ்ரீ சேவைகளும்
1/100 கூடக் காண் கிடை
க்க முடியும். இனியோ
நமக்கு கிடைப்பது கடினம்.
ஸத்குரு சேவை கிடைக்க
விதியையோ எதையோ நம்ப வேண்
டாம்.
இக்கலியில் ஸத்குரு சேவை
எப்படி உங்களைத் தேடி வருகிறது என்றால் கருணையே
வடிவான பரமாத்மா, இறை கருணையால்,

இச் சேவைகள் செய்யாமலும் (செய்ய இயலாத நிலையிலும்) ஆத்ம ஞானம், பெற வாய்ப்பு உள்ளது. இது இறை கருணையும், பர கருணையும், கருணையுடன் செயல்படுகும். அக்கருணை என்ன வென்றால்?

ஓர் ஸத்குருவிடம், கிடைக்கும் நிலையில், கிடைக்கும் வாழ்க்கையில்! **பணிவிடை** செய்ய வேணுமென்று, ஸ்ரீ மஹான்கள் வாயிலாக அறிகிறோம். (அந்த ஸ்ரீமஹாத்மா இடைமறித்தார்)

ஸ்ரீமஹாத்மா:- சேவை வேறு, பணிவிடை வேறு? பணிவிடையும், சேவையும், ஒன்று என்று தான், இதுவரை கேள்விப்பட்டிருக்கிறோம். இன்று உம் வாக்கு, புது அர்த்தத்தை, கொடுப்பது போல் அமைகிறது. இதன் விளக்கத்தை, ஒரு விதி தெரிந்து கொள்ள விரும்புகிறோம் பாபா? சேவை என்றால் என்ன? பணிவிடை என்றால் என்ன? விளக்கி அருளுங்கள் பாபா?




69

செயல்படும் எப்படி என்றால்? உங்கள் ஸத்குருவானவர் / உங்கள் அபிமான பொருள்களில் ஏதேனும் ஒன்றை / அவசியம் என்பார் என்றே ஆக வேண்டும். அன்னமானாலும் பொருளாகவும் / வேறு நாமரூப பொருளாகவும் / ஏதேனும் ஒன்றை.


நைவேத்தியம் :- ஓம் ஆனந்தமஹாராஜீ மா!

சொல்லிச் செய்வதும் / பிறரிடம் பெயர் வாங்கி செய்வதும் / பிறரை வேலை ஏவிக் கொண்டு செய் வதும் / பிறரிடம் குறைகளைக் கண்டு, அவர்களை திருத்திக் கொண்டு செய்வதும் / பலன் கருதி பணம் வாங்கிக் கொண்டு செய்வதும் / தற்காப்புக்காக செய்வதும் / இன்னமும் பல நிலைகள் இருக்கிறது. அப்படி செய்வதனைத்தும்,

பேஸ் / ஆகும்! சேவை ஆகாது. இதற்கு

கூலி (பணம் & புண்ணிய பாவம்) உண்டு.

சொல்லாமல், உணர்வு நிலையில் செய்வதும், பேர்புகழுக்கு, அடிமை ஆகாமல் செய்வதும்! எவரையும் கண்டு கொள்ளாமலும். எவரையும் கண்டிக்காமல் செய்வதும்! பணம் வாங்காமலும் வேறு உதவி எதிர்பார்க்காமல் செய்வதும்!



அவசியம் (70)
ஒன்றே
ஆக வேண்டும்.
அதுவே உங்கள்
ஸத்குருவின் சர்
வாங்க சேவை ஆகும்.
உங்கள் நிலை கண்டு
பார்வையாலேயோ! ஸ்பரிசத்
தாலேயோ! ஸத்பாவ சேவையை பூர்த்தி செய்
வார். அதனால் ஜீவன் முக்தி அவசியம் பெற முடியும்.

அனைத்திலும் மேலாக, இறை & குரு
உணர்வோடு செய்வதும்! சொல் & செயல்!
நாம் அடங்கிச் செய்வதும்! செயல் தாமே வசம்!
முடிவு அவன் (ஸ்ரீ பகவான்) வசம்! என்று எவ்வா
றாயினும், திரும்பியாத செய்வது **சேவை**!
ஆகும் என ஸ்ரீ மஹான்கள் வாயிலாக அறிகிறோம்.
இங்கு **கூலி** (பணம் & புண்ணிய பாவம்) இல்லை.
ஜீவன் முக்திக்கு உரிய தர்மம் இயல்பாக கிடைக்கும்.
பணிவிடை:- **பணிவது**! உன் பணி ஆகும்.
அதன் **விடையாக** (**பலனாக**)! மோக்ஷ தர்மத்தை
ஸ்ரீ ஸத்குரு ஸ்வயமாக, ஜீவன் முக்தி! பெறும் நிலைக்கு,
திறவையை காட்டி வைப்பது, **அவன்** (ஸ்ரீ பகவான்)
**கடமை**! அதை ஸ்ரீ மஹான்களின்
வாயிலாக அறிகிறோம்.



யாம் கர்மாவை செய்யவில்லையாயின் எவரும் கர்மா செய்யமாட்டார்கள்

ஜீவர்கள் மனம் வசம் அகப்பட்டதன்மையால் அவர்களுக்காக யாம் கர்மா செய்வது போல் எம்மாயாவை வைத்து நடிக்கிறோம். ஆகவே இச்ஜீவர்கள், ஸ்ரீபகவானே கர்மா செய்கிறான். நாமும் செய்வோம் என செய்வர்கள். எம் நடிப்பை அவர்கள் உணரவில்லை

ஸ்ரீமஹாத்மா! அன்பான அறிவான பாபாஜீ


(பதில்)

இந்த பணிவுக்கும் விடையாகிய அவன் கிருபைக்கும் நன்று விளக்கம் சொல்லுங்கள் பார்ப்போம்?

வைத்தியம் :- ஓம் அன்பான மஹாத்மாஜீ!

பணிவு என்றால், உடலால் பணிவதாகும் அதாவது சாஷ்டாங்க நமஸ்காரம் ஆகும். கனிவு எனப்படுவது உள்ளத்தில் அன்பு! கருணை! உருக்கம்! ஏக்கம்! நிறைந்து வழிவதாகும்.

இவ்விரண்டிலும், உள்ளம் பள்ளம் ஆகிறது. விடை என்றால், ஸ்ரீபகவத் கருணையின் பிரவாகம்! எம்முயற்சியும்! பயிற்சியும் இல்லாமல், தானே நிறைவதாகும். இது ஸ்ரீபகவான் தரும் விடையாகும். பணிவது உன்பணி. அதன் விடையாக பதிலாக உன்னைக் காப்பது அவன் கடமையாகும் என உணரவும். இனி நாங்கள் கேள்வியின் பதிலை உணரவும்.



ஓர் ஸத்குரு விடம்! (72)

கிடைக்கும் நிலையில்

,, விதத்தில்

பணிவிடை செய்ய வேண்டும்

(A) கிடைக்கும் நிலையில்:-

உன் உடைமைகளை விடாத

நிலையில், அவர் ஸாமான்ய குருவே

உன் கர்வத்தை விழுந்து பணியாத நிலையில், அவர்

ஓர் பாமரனே. உன்னிடம் யதார்த்தமாக சத்குருவாக ... உன் மனதில் இருப்பார்

வைத்தியம் :- ஓம் அன்பான மஹாத்மாஜீ!

இன்றைய கலியுகத்தில், சேவை & பணிவு! பொறுமை!

இவையெல்லாம், கையாலாகாதவன் வேலையென!

போக்கத்தவன்!

வேலையற்றவன் எனவும்! சோம்பல் எனவும்!

ஒதுக்கி வைத்துவிட்டார்கள் ஆகவே நான் இந்த

ஆத்மஞானம்! பிரகாசிக்கவில்லையென அறிக.

காமம் பாடம்! படிப்பு! பட்டம்! பதவி! பணம்!

அந்தஸ்து! கௌரவம்! புகழ்! கீர்த்தி! என்ற

நிலையில், அவையிடமும் **வித்வத்வம்**

மேலோங்கி, அவையின் அறிவுக் கண்ணையும்!

மறைத்துவிட்டதென சொல்லலாம். ஸத்குருவின்!


தாவசேவையினால் :- வினைபரிபாகம் பெருகும்.

மானபிமானம் சாம்பல் ஆகும். ஆகாமியவினை

அழியும். பழவினையாகிய சஞ்சிதம் எரிந்து

சாம்பலாகும். பிராரப்தம் சுககர்மாவாக மாறும்

சாஸ்திர! வேத! வேதாந்த! பாடங்கள்!



(B) கிடைக்கும் (73)

விதந் திவீ:-
பணிவிடை செய்ய வேண்டும்
பாக்கியார்த்த சிறந்தை
யும்! ஆஸ்ரம பணியும்
இதில் இடம் பெறும்.
இவ்விரண்டிலும் குறிப்பாக
சொல்வது, ஸ்ரீ கவனசக்தி
இல்லாமையும்! ஸ்ரீபாத நமஸ்காரமே!
ஸ்ரீபாதுகா சேவையும் | பாதுகைகளை ஒழுங்குபடுத்துவதும் ஆகும்.

குரு மூலமாக, நேரடியாக கேட்க முடியாமல் போனாலும்; அவைகளின் **ஸாராம்சம்! மட்டும்!** ஸ்வய அனுபவம் ஆகும் என, அனுபவ ஸ்ரீ ஆசிரமவாசிகளின் வாயிலாக அறிந்தேன்.

குறிப்பு:- ஸத்குரு சேவை கிடைப்பது மிக கடினம்.

அதன் காரணம்?

(A) உன் கவனக்குறைவு, உன் ஸத்குரு சேவையை மறையப் பண்ணும் & மறக்கப் பண்ணும்.

(B) உன் சோம்பல் & தூக்கம்! உன் ஸத்குரு சேவையை மறையப் பண்ணும் & மறக்கப் பண்ணும்.

(C) காலக்கணக்கின் சந்தேகம் உன் ஸத்குரு சேவையை மறையப் பண்ணும் & மறக்கப் பண்ணும்.

(D) பணம் & பெண் & ஆண் மயக்கம் உன் ஸத்குரு சேவையை மறையப் பண்ணும் & மறக்கப் பண்ணும்!



74

ஸத்குரு ஒருவரே
வழிகாட்டி ஆகார்.
கை காட்டி ஆவார்.
நாள்காட்டி ஸ்ரீ பகவான்.
ஆகவேதான் ஸத்குரு!
சேவை ஜீவன் முக்தியின்
திறவுகோல் எனவும், ஸ்ரீ மஹான்களால் சொல்லப்படுகிறது.

(E) வீண்பேச்சின் வார்த்தையின் மாயா ஜாலம்!
உன் ஸத்குரு சேவையை மறையப் பண்ணும் மறக்கப் பண்ணும்.


(F) பிறரிடம் குற்றம் குறை காணும், மூர்க்கவன சக்தி!
உன் ஸத்குரு சேவையை மறையப் பண்ணும், மறக்கப் பண்ணும்.

(G) முடிவாக உன் **பழக்கவழக்க** தோஷம்!
(பேச்சு & செய்கை)
உன் ஸத்குரு சேவையை மறையப் பண்ணும் மறக்கப் பண்ணும்.

ஆகவே **கவனம்** தேவை.

இங்கு ஓர் முக்கியம், என்னவென்றால்?
அன்பர்கள் (பிரம்மச்சாரிகள் & பக்குவ ஆன்மாக்கள்) **நீங்**கள்
**அசிரத்தை**யால் **பூரணத்துவம்**
பெற முடியாது


பரகருணையால், ஸத்குருவின் சேவை (தடைப்படுவதைப் போல் பாவனையை காட்டி,) சேவை
ஸத்குரு தாவம் மறைபடும் அல்லது மறைக்கப்படும்.



ஸத்குரு சேவையில்
மட்டும்! 75
ஜீவன்முக்தி உண்டு.
மற்றும் எந்த சேவை
யிலும், ஜீவன் முக்தி
இல்லை. ஆனால்
அச்சேவைகள், நல்ல கண்டு
பலன் தரும்! ஆனால் அச்சேவைகள், ஜீவன் முக்தி
க்கு, வழிவகுத்துக் கொடுக்கும். வேண்டும் பயன் கிடைக்கும்.

ஸத்குரு சேவை! செய்ய பாக்கியம் பெறுதவர்கள்.
அவர் கூறும், அனுபவ வாக்கியங்களில்!
வாக்கிய சிரத்தையே! **சேவை** ஆகும் என உணர்க.
இதன் உண்மை என்னவென்றால்?
அவர் கூறும், 10 வாக்கியங்களில்! ஒன்றை
ஏற்று அனுபவித்தால் போதும்.

குறிப்பு:- நன்மையை கூறும் 10 வாசகங்களில்
நீ ஒன்றை மட்டும், ஏற்று வழி நடந்தால் போதும்.
10 நற்குணங்கள் உன்னைச் சேரும்.
தீமையை விடு என கூறும், 10 குணங்களில்! ஒன்றை
மட்டும் ஏற்று, அவ்வொன்றை விட்டால் போதும்.
10 தீய குணங்கள்! உன்னை விட்டு ஓடிவிடும்.
இது ஸத்தியம்! இது ஸத்தியம்!! இது ஸத்தியம்!!!
சேவையிலும் ஜீவன் முக்தி உண்டு.
வாக்கிய சிரத்தையிலும் ஜீவன் முக்தி உண்டு.




ஒவ்வொருவருடைய விதி
பரிபாகம் கண்டு,
அவர் வாக்கிய (76)
சிரத்தையில் சிலருக்கும்
தூலசேவையில் "
நி டு க ண் டு

ஜீவன் முக்தி பெறுவார் என, ஆதட ஸ்ரீமஹான் கர்வாயிலாக அறிகிறோம்.

கேள்வி (2) ஸ்ரீமஹான்களின், ஆசியினால்தான், சேவை கிட்டுமா? அல்லது சேவை செய்தால்தான் ஆசி பெற முடியுமா?


பதில் :— ஹே அன்பான, அறிவான, மஹாத்மாக்களே! சேவையினால்தான் ஆசி பெற முடியும்! என்று ஸ்ரீமஹான்களின், ஆசி பெற்றால்தான் சேவை கிடைக்கும், என உணர வேண்டும்.

(A) சேவை :— சேவை என்பது, இரண்டு வகைப்படும். ஒன்று தூலசேவை, மற்றொன்று வாக்கிய சிரத்தா சேவை, என ஆகும். முந்தையது தூலம், பிந்தையது சூட்சமம் ஆகும். தூலசேவையினால், வினைகள் பரிபாகப்படவும், பின்னர் அழியவும் செய்யும். வாக்கிய சிரத்தையினால் (இது சூட்சமமாக இருப்பதால்) மனமடங்கவும், பின்னர் மனோநாசமும், உண்டாகும் என உணர வேண்டும். வினையும், மனமும், அழிந்தாலன்றி, ஜீவன் முக்தி இல்லை.



அவரை நம்பியவர்கள்
யாவர் எனில்? 77
சந்தேகம்!
களங்கம்! கலக்கம்!
பயமின்றி ஓர்மையுடன்
எல்லாம் நீயே! என
உன்னை முழுதுமாகக் கொண்டால்
எல்லாம் ஒன்றே என அவர் கைகாட்டுவார்.
அக்கைகாட்டுதலே, ஆசீர்வாதம் ஆகும்.

இதில் ஓர் உண்மையாவது:- ஸத்குருவின் தாவம் உன் தாவம் போன்றே, பரீட்சிக்கப்பட்ட ஒன்றாகும். உன் தாவம் வினையை ஏற்று வந்த தாவம் ஆகும். ஆனால் உன் ஸத்குருவின் தாவமும் உன் தாவம் போன்று, தோற்றமளிக்கும். அவர் தாவம், அவரை **நம்பியவர்களின்** முழுமையாக வினையை நாசம் செய்ய வந்த தாவம் என, அறிய வேண்டும். அவரும் மாயனையோ, மாயாவின் காரியத்தையோ கொண்டு, இவ்வுலகில் வந்தால், உன் வினையை, அவர் நாசம் செய்ய முடியாது. அவரும் ஸ்ரீபகவானைப் போல், தர்ஸனம் கொடுத்து விட்டு போக வேண்டியது தான். ஆனால் அவர் தர்ஸனத்திற்காக மட்டும் வரவில்லை! ஜீவரக்ஷிப்புக்காகவும் வரவில்லை. ஜீவ அழிப்புக்காக வந்தவர் என்று உணர வேண்டும். முள்ளை முள்ளால் எடுப்பது போன்று, அவர் தாவ சேவையை கொடுத்து, உன்





வினையை, அவர் நாசம் செய்ய முடியும். அவர் உள்ளே மாயா | அடங்கி இருப்பதால் உன் வினைகளை | அம்மாயா அறியும். (ஆனால் அறிவு அறியாது. அது சாட்சி. அது சைதன்யம் ஆகும்) அங்கு அவர் மாயாவானது, தன் மகனை மனதின் | இனிமையும் | அதனைச் சேர்ந்த வினையின் பின்மையும் உணர்ந்த தன்மையினால், அம்மனது | மாயா தானே ஏற்றுக் கொள்ளும். மனம் வினையை தானே ஏற்றுக் கொள்ளும். ஸத்குரு கிருபையினால், அவ் வினையும், நாசமாகி விடுவதால், ஜீவன் முக்தி | இயல்பாகி விடும் என உணர்க.

(B) ஆசி :- ஆசி என்பது, மூன்று நிலை என்று, ஸ்ரீ மஹான்கள் | சொல்லக் கேள்விப்படுகிறோம்.

(1) வாக்கின் நிலையில், கூறும் ஆசியுரை.

(2) ஸ்பரிசத்தின் மூலமாக பெறுவது ஆசியின் கிருபை.

(3) அபய ஹஸ்தத்தால் பெறும் நிலையை, **கிருபா கடாக்ஷம்** | என கூறுவதுண்டு.



இந்த ஆசிவுரைகள்
பயன்தருமா?
பயன்படுமா?
எனகேள்வி எழுவாம். (79)
விடை:- உனக்கு ஆசி
வழங்குபவர்கள் ஆசி
வழங்க த கு தி
உடையவர்களாக இருக்க வேண்டும்
அதைஏற்கும் உனக்கும், அந்த " " "
இருக்க வேண்டும்.

நான்காவது உள்ளதை, அதிரகசியமாக பாதுகாத்தார்கள்.
அந்த நான்காவது :- அறிவு நயனஸ்பர்ஸ
அருள் ஆசி! ஆகும் என ஸ்ரீ ஸத்குரு
வாயிலாக அன்று உணர்ந்தோம் அதை இன்று
உங்களுக்காக வெளியிடுகிறோம்.
வரிசையாக உரையும்.

(1) வாக்கின் நடையால் கூறும் ஆசிவுரை!

விளக்கம்:- வாக்கினால் லௌகீக சுக இன்பங்களையும்
தெய்வீக சுகானந்தத்தையும், குறித்து அனேக
ஆசிவுரைகள் உண்டு. இவைகளை வழங்கக் கூடி
யவர்கள், சாமான்ய குருமார்களும்! வேத சாஸ்திர
பண்டிதர்களும், ஸ்ரீமஹான்களும் போன்றவர்களும்
வேதாந்த அத்வைத குருவைப் " "
மற்றும் பெரியோரும், வாக்கின் பாக்கியத்தும் ஆசிவுரை ஆகும்.




மேலும் அவ்வாசி (40)
உன் வி ன வரும்.
கண்டோன் வரும்.
ஹினசுக பந்தம்
இல்லாமல் வராது.
இதன் பொருள்;
ஸ்ரீ பகவானின் மாயா!
அம்மாயாவசம் மனம்.
ஏற்றுக் கொள்கிறது. அம்மாயாவசம் மனம். இவ்வாறு ஹினமாகிய இவைகள்! இவைகளின் வசம்
மனதின் வசம் [illegible]

உ ஸ்பரிஸத்தின் மூலமாக பெறுவது ஆசியின் கிருபை!

விளக்கம்:- இதில் பெரும்பாலும் மந்திர தீக்ஷை அடங்கும். ஸ்ரீபகவானிடம் பற்றும் நிலைக்கு, பக்தர்கள்! பாகவதோத்தமர்கள்! ஸ்ரீமஹான்கள்! மற்றும், முக்கியமான பெரியோர்களும் அடங்கும்.

இதை **ஹஸ்த, மஸ்த, ஸையோ பசாரம்!** என ஸ்ரீமஹான்கள்! சொல்ல கேள்விப்படுகிறோம்.


குறிப்பு:- ஆசிவழங்கப்பட்டோரின் அப்யாஸித் தரமானது! ஆசி வாங்கப்பட்டோரின்! சிரத்தை, தகுதி முடியறிவையும்! தகுதி விரிதகுதியையும்! மந்திர ஆசியின் தன்மையை, அனுசரித்து வழங்கப் படுவதாகும். இதுவும், லௌகீக ஆசிகளும்! தெய்வீக ஆசிகளும் அடங்கும். ஜீவன் முக்தி! ஆசி இதில் அடங்காது.



மாயா வெகு வெகு திறமையுடன் (81)
செயலாற்றும்.
என உரை வேண்டும்.
ஆசி உரை சூட்சுமம்
அவ்வாசியிறல் நடை
பெறும், காரியமனைத்தும்
கொண்டதாகும். ஆகவே இவ்
தாவசம் அடங்கும் கொண்டிருந்தால் செயலே, ஆசி உரையின்
மாயா & மனம்! இவைகளை விளக்கும் ஆகும் என்று மகான்கள்
சொல்வர்.

(9)

அபயஹஸ்தத்தால் பெறும் நிலை, கிருபா கடாக்ஷம்
என்றுரைப்பர்:-
விளக்கம்:- ஸ்ரீபகவான் கிருபையை, பூரணமாக
பெற்ற தர்சனம்! ஸ்பர்சனம்! உரையாடல்!
உறவாடல்! பக்தோத்தமர்களும் & ஸித்திகள் சில
கைவரப் பெற்றவர்களும்! அபய ஹஸ்தம்
காட்டி, ஆசி வழங்குவதை, கிருபா கடாக்ஷம்!
என சொல்வதுண்டு. இவர்களும் தலையில்
கரம் வைத்து ஆசி வழங்குவதும் உண்டு.
இங்கு லௌகீக ஆசிகளுக்கு இடமில்லை.
பாகவதோத்தமர்கள்! ஸ்ரீபகவான் நிலைக்காத
ஆசி வழங்குவர்.
ஸித்தர்கள்! அபூர்வ சக்திகளை காட்டும் நிலைக்கும்
இவருக்கு நிலைகண்டு கொடுக்கும் நிலைக்கும்!
அபயகரத்தை உயர்த்தி ஸாத்வீக பலத்தையும்
மந்திர பலத்தையும்! ஆசி வழங்குவர்! என
கேள்விப்படுகிறோம்.



கைகளை மூடியநிலை (42)
யால் செய்யும் ஆசி:
மந்திர ஜபம் செய்யும்
நாவுக்கே செய்யும் ஆசி
ஆமை என உணர்க.
கைகளை விரித்த நிலை
யால் செய்யும் ஆசி
ஸ்ரீபகவந்நாம சம்பந்த
தீர்க்க பக்த நிலைக்குச் செய்யும் ஆசி ஆமை என
உணர்க. இவ்விரண்டும், ஹநுமனும்! நிலைகளே
பவித்ரமானவை என அறி.

(4) அறிவின் நயன, ஸ்பரிஸ, அருளாசி:-

ஞானப்பார்வையின் தொட்டுணர்ந்து ஆசிவழங்குதல்

இது ஸத்குரு & திடஞானி! இவர்களுக்கே உரியதாகும்
ஸத்குரு:- இவரிடம் மனம் இல்லாத தன்மை
யாலும், அறிவும் & பேரறிவும்! நிலை கண்டு
செயல்படுவதாலும், யோகமாயாவின் காரியம்!
அதிகம் இராது. யோகமாயாவின் காரியம்!
அதிகமாக இருக்கும். இதன் இயக்கம் இவரும் அறியார்
ஏனையோரும் அறியமுடியாது. இதன் காரணம்,
இவர் கர்த்தாவில்லை. யோகமாயாவே! கர்த்தா
ஆகும். இவரிடம் வாக்கின் நிலையில், எந்த
வாழ்த்து (ஆசி) ஒலியும் இராது! வராது. இவரிடம்
நாராயணா! என்ற ஓர் ஒலிமட்டும், இயல்பாகவே
தொடர் நிலையாக இருக்கும். சிலஇடங்களில்
இவரிடம்மட்டும், நன்றாக இரு
என வரலாம்.



உள்ளம் ஓம்
பள்ளம்
என ஆறுவன்றட!
உன் ஸத்குருவின்!
அதாவது ஸ்ரீமஹான்களின்
அருள் ஆசி!
பெறுவது வெகு வெகு சுலபம் ஆகும்.

மற்றும் லௌகீக! தெய்வீக! பாரமார்த்திக! சம்பந்த
அந்த வாக்கும் ஸராஸம் இவர்களும் நாராயணா!
என்ற வாக் கோவிலில், மங்களம் உண்டாகும்.
என்ற அர்த்தமாவது, இரது என்பதே ரகஸ்யம்
ஆகும். தெய்வீகத்தையும் பரமார்த்திகத்தையும்
இணைக்கிறார் என்றும், லௌகீகத்தை முழுமையாக
இல்லை என, நன்றாகிறார் எனவும் பொருள் கொள்ளவும்.
நன்றாகிரு! என்றே! நல்லவா இரு! என்றே! கூறும்
வாக்கும், லௌகீகம் அனுபவமும் இல்லை என,
அறிக. அவ்வாக் கோவிலும், தெய்வீகத்தை சுட்டிக்
காட்டி பரமார்த்திகத்திற்கு வழிகாட்டுகிறது என
உணர்க. மேலும் ஓர் உண்மையின் ரகஸ்யம்!
என்ன வென்றால்? அன்று அருளியதாகும். அதை
இதுவும் பக்கு! இன்று! உங்களுக்காக, வெளியிடுகிறோம்.
மனப்படைத்தோர் ஏற்க முடியாது. அறிவுடையோர்! மட்டுமே ஏற்பர். இது ஸத்தியம்.



அருணாசி என்பது,

கொடுப்பதும் வாங்குவதும் அ...ல்...ல!

உன் உள்ளத்தின் உருக்கம் & ஏக்கம், பெருக்கம் இவை மூன்றும்

கண்ணீர்!

சத்குரு & திடஞானி & பரகுரு, இவர்களிடம், யோகமாயாவின் விளையாட்டு (அதுவாக இயல்பே) எச்சமயம் வந்து வந்து போகும். ஆனால் யோகமாயாவின் விளையாட்டு இவர்களை அறியாமலேயே, (அவர்கள் பக்கத்தோடு நின்று இருக்கும் சதா) இயல்பான! தன் காரியங்களை, செய்யும்.

அக்காரியம் என்னவென்றால்?

மேவேண்டிய ஓவரும்! தம் அபயஹஸ்தங்களை! (அபயகரங்களை) மேலே தூக்கி, ஆசிர்வதிக்கும் போது! அவர்களுள் இருக்கும் ஆத்மசக்தி! என சொல்லும் வைப்ரேஷன்! அதாவது பவர் காந்தம்! அதாவது



இன்றுநாள் (85)
உள்ளது
பக்தியா?
ஞானமா? என
உணர்ந்து, இறை
பர கருணையானது!
அந்த ஒன்றே ஸத்குரு
நித்யமும்; ஸ்வ ப்ரகாசமாகிய நித்யமும்
அருணாசல ரமணத்வம் தெய்வீகமயம்.

ஆத்ம ஒளி! அதாவது அகண்ட பேரா
ஒளிக்கதிர்களாக! ளி!

அவ்வொளிக்கதிர்களை, மனக்கண்களால் காணவும்
உணரவும் முடியாது. இயலாது. அறிவுக் கண்ணால்
காணமுடியாது. ஆனால் உணர முடியும். அவ்வாசியை
வாங்கப்பட்டவருக்கு, உ ண ர மு டி யு ம்.

அவ்வுணர்வு:- மயிர்கூச்செறிதல். உள்ளம்
புளகாங்கிதம் அடைதல். ஓர் பரவச நிலை பெறுதல்.
சொல்லவொண்ணா, விளக்க வொண்ணா. ஓர் ஆனந்தம்
மின்சார ஒருவழிப்பாதை போல் அனுபவிக்க முடியும்.


பேரொளியுடன்! கூடி இருப்பவருக்கு
மட்டும்! கொடுப்பவரையும்! வாங்குபவரையும்!




தனித்த நிலையில் ஒருவர் ஆசி ! பெறுவதும், ஸத்குரு வழங்குவதும் நிகழ்ந்தால், அவர் மனம் உடையவராக இருந்தால், அவரால் அதை உணர முடியாததான் ஆனாலும் சொல்லொணா ஓர் ஆனந்தம் ஒருவிதம் அனுபவிக்க முடியும்.

அஞ்ஞானம் உணர முடியும்.


ஆனால் அதை விளக்கவோ! சொல்லவோ! முடியாது. ஆனால் அவ்வாசியை, வாங்கப்பட்டவருக்கு, அந்த நிலை கூடுவதை, அண்மையில் சில காலத்தில் அவசியம் உணர்ந்து அனுபவிக்க முடியும். என எம் ஸ்ரீ குருதேவர் வாக்காகும். அவர் உணர்த்த உணர்ந்த, அனுபவத்திறனும். இதை வெளியிடுகிறேம். அதன்பின், இருமுறை பத்ரி யாத்திரையால்! ஸ்ரீமஹான்களின்! சந்திப்பு & உரையாடல் & உறவாடல்! இவற்றின் மூலமாகவும், உணர்ந்தோம் உணர்த்துகிறேம். இவ்வாக்கியம்.



ஸத்குரு & திடஞானி! பரகுரு ஸ்ரீ மற்றும் யோக சித்தர்களிடம்! மட்டும் ஒளிக்கதிர்களின் ஆசி பெறமுடியும். இவர்களும் மட்டுமே யோக மாயாவின் காரியம் இருக்கிறது என உணர்க.

இன்னொரு முக்கிய அம்சம் என்ன வென்றால்? முன்கூறிய மூன்று! மகான்களிடம் மட்டுமே ஒளிக் கதிர்களின்! ஆசி பெறமுடியும். அதே போல் அனுபவ யோகிகளிடமும்! முதிர்ச்சியான சித்தர்களிடமும்! இந்த ஒளிக்கதிர்களின் ஆசி பெறமுடியும். ஆனால் சாமானியர்களிடம்! பெறமுடியாது. என்பதை, ஸ்ரீமகான்களின் வாயிலாக அறிகிறோம்.

பொதுவாக அன்பர்கள் கூட்டங்களில்! மேலே கூறிய, மூவரும் கரம் உயர்த்தி! ஆசி வழங்கும் போது? அங்குள்ள அனைவர்க்குமே, பேதம்! இவ்வாறு, அவ்வருள் ஆசி கிட்டும். எல்லோரும் பெறுவார்கள் என்பது சந்தேகமே. ஆனால், பக்குவப்படாதவர்கள்!



ஏக்கம்! உருக்கம்!
கண்ணீர் பெருக்கம்!
ஆகிய இவை (௩)
மூன்றும்;
மனதின் தாபத்
திரயங்களாகும்.

நாமரூப ஆகக ஜீவ உறவு சுற்ற நட்பு
இவைகளுக்காகவே இம்மூன்றும்

அவ்வருள் ஆசியை (பாசப்), ஒளிக்கதிர்கள் மூலமாக
பெற்றாலும், மனம் **பசையாகவே**
இருப்பதால், அதை உணர முடியாது.
ஆதலால் அந்த ஒளிக்கதிர், அப்பாசப்பசைகளை,
அணு அணுவாக, உலர்த்தும் என்பதே உண்மை.
காலக்கிரமத்தில், பல முறை செய்யும் தரிசன
பலத்தால், அவர்களும், உணரும் நிலை தானே
இயல்பாக பெறமுடியும்; என்பதே உண்மை.
அந்த அருள் ஆசியை? பெறுபவர்கள் **யார்**
**என்றால்??**

பந்துக்காக! ஏங்கும் குழந்தையாகவும்!
நாமரூபம்! போதும் போதும், என்ற நிறைவாகவும்!
**அவனை!** (ஸ்ரீபகவானை) காண வேண்டும். அல்லது **அது!** ஆக வேண்டும்.
எனது இதய உள்ளமும். அத்துடிப்பால்



69

பயன்பட்டு வந்தாலே, மனம் தடித்து வலுப் பெறுகிறது. அம்நிலையில் ஸக்தை நோக்கிப் பிரயோகிக்கும் போது: பக்தி & ஞானம் நோக்கிச் செல்லும் போது அவ்வுருக்க ஏக்கத் திறலே:

**உருக்கம் & ஏக்கம்!**

இவைகளால் உள்ளம் **பஞ்சு!** போல் ஆகி இருக்க வேண்டும். வறட்சியாகவும்! நெகிழ்ச்சி இல்லாத இருக்கமாகவும்! இருக்கவாகாது. அவரவர்களே இதை **ஸுவை!** சோதனையாக உணர்ந்தால் போதும். உரை முடியும். இது பிரமாண உண்மையாகும். அம்முறையில் வரும், அருளாசியால் வரும் ஒளிக்கதிர் இயக்கத்தை **மனதை!** உடையவர்கள்! சந்தேகிப்பது என்பது **கள்** தோஷ வக்ர குணங்களும், பாடம் படிப்பதால் வரும் **போட்டி & பொறாமை!** என ஸ்ரீமஹான்கள் சொல்ல கேள்விப்பட்டிருக்கிறேன்.



உலகில் எல்லாம் சர்வ நாசமாகிறது. ஆனால் ஒரு சாதகனுக்கு, நாமரூப, ஜக ஜீவ உறவு சுற்றம் நட்பு. தொழில் பணம், போகம் வரவுகளில் நாட்டம் தேட்டம் இல்லாமல் இருந்தால், அவனுக்கு ஒரு உறக்கம்! ஏக்கம்! கண்ணீர் பெருக்கம்! தேவை இல்லை.


ஓர் உணர்வு:- (1) அபயகரம்:- இது ஸ்ரீபகவான்! நிலையில் பயன்படும் போது, ஜீவ/ நேசிப்பு நிலையில், வின் நன்று, கொடுக்கவும்! எடுக்கவும்! முடியும். இங்கும் ஸ்ரீபகவானின் ஆத்மாவின் ஒளிக்கதிர்களே! அக்காரியங்களை கவனிக்கவும். இது யோகமாயாவின் வேலையாகும்.

(2) அபயகரம்:- இது ஸ்ரீ ஸத்குரு! யோக சித்தர்களின்! நிலையில் பயன்படும் போது, ஸத்குரு நிலையில், ஜீவ/ அழைப்பு நிலையில் வினையை! ஒன்றுபடுத்தி மனதால்! முடிக்கவும்! காலக்கிரமத்தில் மனம்! முடியவும்! மறக்கவும். ஆத்மாவின் பாதங்கள்! ஒளிக்கதிர்களே! அக்காரியங்களை, முறையாக கவனிக்கவும். இது யோகமாயாவின்! வேலையாகும்.



இ அவனுக்கு (91)
தீவிரமான
நம்பிக்கை
யில், வைராக்
கியம் அவசியம்
வேண்டும். அவன் மனமே
வைராக்கிய ஞானத்தால், மனம் மனத்தைக்கொ
ஜீவன் முக்தி அடையமுடியும் தெளிவாக்கும்.

③ அவயகரம்:- இது யோக முத்திரைகள்! நிலையால்
பயன்படும் போது, ஆற்றல் மிக்க சக்திகளையும்,
அபூர்வ சித்திகளையும்! வினை! இல்லாமல் இருந்தாலும்!
வலியக் கொண்டு, கர்மாவை பெருக்கவும்,
மன! அஹங்காரத்தை வளர்க்கவும். விதி!
யையும், இயல்பாக மாற்றி அமைத்து ஜன்
மாவை! தொடரப்பண்ணவும் முடியும்.
இங்கும் பரமேன்! ஒன்றிக்கத்தக்கதே பயன்
படுகின்றன. இதுவும் யோகமாயாவின் காரியமாகும்.
குறிப்பு:- இந்த யோக முத்திரைகளுக்கென,
மணிக்ரீவம்! என்ற ஒரு ஸ்தாபனத்
தையும், கொடுத்து அமைத்துக் கொண்டு, செயல்
படும் இந்த, யோகமாயாவே!
ஆகும் என, ஸ்ரீமஹாங்காளி தாயிவாக அறிகிறோம்.



பிரணவம் என்ற (92) ஒலி வேகமானவனின் நிலையால் ஒலிக்கும் பதிவாக நாராயணா என்ற ஒலி வேகமானவனின் நிலையால் ஒலிக்கும்.

இது ஸ்ரீ மஹான்களின் உரையாடல் இயல்பாகவும் நிரமமாகவும் ஒலிக்கும் நியாயம்.

ஓர் குகைக்கு, ஓர் ஸ்ரீ மஹாத்மா! அவ்வைத்தியத்தை! அழைத்துச் சென்றார். அக்குகையில், மேலும் மூவர்! அவ் வைத்தியத்தின் வருகைக்காக காத்து இருந்தனர் போலும்? அவ் வைத்தியமும் அங்கு சென்றதும், அம்மூவரும், இணைந்து பிரணவம்! பாபாஜி! என்றார்கள்.

வைத்தியம் :- நாராயணா! நாராயணா!! நாராயணா!!! என்றது.

அதில் ஓர் ஸ்ரீ மஹாத்மா :- ஆமாம் பாபா! நாங்கள் ஒரு முறைதானே, பிரணவம்! என சொன்னோம். ஆனால் தாங்களும், ஒருமுறை நாராயணா! சொல்லலாமே! ஏன் மூன்று முறை சொன்னீர்கள் பாபா?

வைத்தியம் :- பிரணவம் ஒலி ஒன்றே! ஆனால் அவ்வொலி! மூவர் வாக்கிலிருந்து வந்ததால், அம்மூன்றுக்கும், மூன்று முறை, நாராயணா! சொன்னேன்.

ஸ்ரீ மஹாத்மா :- தாங்கள் அவ்வைத்தியமாயிற்றே! எங்கள் இருவரையும், ஏன் ஒன்றாக உரைபடிய வில்லை? இம்மூன்றும், மூன்று மண்டலங்களைதானே பாபா? அவை மண்டலந்தானே பாபா? பின் எப்படி பேதம் கேட்கிறது?



தெய்வ வாக்கு
பொய்யாகலாம் : (93)
இதன் காரணம்?
ஸ்ரீபகவானுக்கு ரூபம்
இல்லை. நாமா நன்றே
ஸத்தியம். நாமா
ரூபமாகமே. ரூபசாக்ஷி
அறிவதான் உணர முடியுமே
தவிர மனம் உணர முடியாது. ஆகவே மனதினால்
ஸ்ரீபகவான் வாக்கு பொய்யே. அறிவு ஒளியால்
,, ,, சத்யமே. இது உணர்வு நிலை.

வைத்தியம் :- சந்தர்ப்பமாகவே இருக்கு

ஓ ஓ ஓ அத்வைத பாடமா? அம்மையாரின்
அவ் ஒளி மின்னலையும் நாங்கள் ஏற்கவில்லை.
யாரும் ,, .
இவ் ஒளி ,,
எந்த ஒலிஅலைகள், எங்கிருந்து வந்ததோ?
அங்கிருந்தே அவ் ஒலி அலைகள் பரிமாற்றம்
பண்ணியது. அதை அங்கு, பேதம் இல்லையே.
அதை இங்கு உங்கள் **மனமே** பேதமே.
கேள்வியாக வந்தது. இங்கு **அறிவு!**
அதை சமமாக, ஒத்துக் கொண்டது எனது உணர்வும்.
கேள்வி என்றால் பதிலும் உண்டு.
,, மறந்தால் ,, இல்லை. (மனமும்)

ஸ்ரீமஹாத்மா :- நம் பாபாவிடம், கேள்வி
கேட்டு ஜெயிக்க முடியாதுதான்! ஏன் இந்த வீண்
கேள்விகள்? நாம் அவரை அழைத்ததோ
இரு சந்தேக நிவர்த்திக்காக. அதைத்தவிர,
கேளுங்கள்! இந்த பாபா! அதிகம் பேச விரும்ப
மாட்டார். புகழ்ச்சியும் விரும்பார்.




ஓர் ஸ்ரீமஹாத்மா:- ஓம் அருமையாபாவே! இரு நிலைகளில் ஒன்றுபட்ட ஓர் கேள்வியாகும். ஆதலால் பதில், இரு நிலைகளில் தர வேண்டும்?

வைத்தியம்:- அன்புமயமான மஹாத்மா! கேள்வி என்னவோ, அதை சொல்லுங்கள்?

ஸ்ரீமஹாத்மா:- (A) அன்பானமாமா! ஓர் ஸத்குரு! வாக்கில், வெளக்க வாழ்த்தொலி வராது! என சொல்கிறீர்களே? அப்படியானால், ஸ்ரீமத் ராமாயணத்தில், ஓர் சம்பவம்:- ஸ்ரீபாத ஸ்வாமிகள் என்ற ஓர் ஸத்குரு! தம்மானவரை, விடோபா! என்பவனின் மனைவிக்கு! இவ்வாறு ஆசி வழங்கினாரே? அவ்வாசி வாழ்த்தொலியால், அம்மாதுவும் நான்கு புத்திரர்களை பெற்றெடுத்தாளே? இதன் காரணம் என்ன?

(B) மாந்தாதா என்ற ஓர் சக்ரவர்த்திக்கு, ஓர் மஹாத்மா உச்சிஷ்ட பிரசாதம் கொடுத்து, புத்திர பாக்கிய ஆசி வழங்கினாரே? அம்மாதுவும், நான்கு குழந்தைகளை பெற்றாளே? இதன் காரணம் என்ன?



ஓர் உண்மை 95
பக்தன் ஸ்ரீபக
வானை ஒன்றிய
நிலையில் வாக்கில்
வாழ்க்கையில் வந்தா
லும். அது அவனையும்
பாதிக்காமல் வினையையும்
அணுகாது வரையும்
முன்பின் மாறாது இருப்பாக செய்து முடிக்கும்.
பாதிக்காமல்

ஸ்ரீமஹாத்மா:- இவை கிரமப்படி கேள் போதும்.
கேட்டால் போதும். இவை கொண்டு இருந்திருப்பது
என தேர்ந்திருக்கிறது. அவை எவை எவை?
எதனால் வந்தது? என கூறுவீராகில்
போதும் பாபா?

வைத்தியம்:- இது நல்ல கேள்வியே.
புத்தி கவனமாக கேளுங்கள்? முதலில் கூறியது
ஸ்ரீ ஸத்குருவின் ஞானம். அம்சம் ஆகும்.

இரண்டாவது கூறியது, ஓர் பக்தருக்கு செய்த
ஸ்ரீ பாகவத தர்மமாகும். என உணர்வீர்.

(1) முதலாவது:- ஸத்குருவான ஸ்ரீபாபா ஸ்வாமிகள்
என்பவர் ஸ்ரீநாத பகவானாகும். ஸ்ரீவிட்டோபா
" ஸ்ரீ பை[illegible]ஸ்டா ஆகும். ஸ்ரீகுருதேவர்
ஆதியில் பாரத நாட்டு குழந்தைகளின் தா.
கர்த்தாக்களும் ஆதி சக்தி என்ற



மனத 96

அழிக்காத நியதியில் ஒருவர்க்கு பக்கமாய் போலும் நாணயம் போலும் வாழ்த்தனாவி வந்தால் அது விதி விதியை மீறிய வரும் அவ் வெறாவியை கொடுப்பவருக்கே ஆகாது விதியால் அவரையும் பாதிக்கும்

யோகமாயா ஆகும். இவர்களின் விளையாட்டு, ஓர் திட்டமிட்ட காரியமாகும். ஆனால் ஜீவ ரகசியம் இல்லை. ஆனால் கலி யுகத்தில், தர்ம நெறியை புகட்டி, பக்தியால் ஸ்ரீபகவானை அடையும் நிலையையும் ஞானத்தால், ஜீவன் முக்தி ,, ,, உணர்த்துவதாகும்.

ஸ்ரீராமாயண காலத்தில், ஸ்ரீவசிஷ்டர் பிரானுக்கு, ஸ்ரீராம லக்ஷ்மண பரத சத்ருக்கனர் பால்ய பருவத்தில் கண்டு புத்திர மோகம் கொண்டதாக முன் தொடக்கத்தை காட்டி, பின் முடிவில் திரிகர்த்தாக்களும் ஆதிசக்தியும் தோன்றியதாக கதையை முடித்து, ஸத்திய தர்மத்தை நிலைநாட்டியதால், அவ் வரலாறு ஆதி வேதக முறையில் அமைந்ததாக சொல்வது கதை தர்மமாகும். வேதகம் அறிவு.



காரணம் (97)
இல்லாமல்
காரியம்
இல்லையென்பதே லக்ஷியம். காரணம்
ஒன்று ஆகும். அக்காரணத்தை வைத்து காரியம்
பல பல உண்டாகி கர்மா முடியவும்!
கர்மா தொடரவும்! முடியும்.

(2) இரண்டாவது :- தாங்கள் கூறும் மாந்தாதா!
என்று எண்ணினவர் ஸ்ரீபாகவத தர்மத்தை
இறுதியாக கடைப்பிடித்து வந்தார். ஆகவே
விதிக்கும் அப்பாற்பட்டு ஓர் நிலை
ஸ்ரீபாகவத தர்மத்தால், நடந்து முடிந்தது.
இங்கு ஓர் கேள்வி எழலாம்? தெய்வத்தால் ஆகாதது
பக்தனால் முடிக்க முடியுமா? என்றும், தெய்வ
தர்மத்திலும், ஸ்ரீ பாகவத தர்மம்
உயர்ந்ததா என்றும் கேள்வி எழலாம்?
இதை உணர்க.
ஓர் பக்தன், ஸ்ரீபகவன் நாமாவில் ஒடுங்கி விடுகிறான்.
ஸ்ரீபகவானோ, அப்பக்தனின் திருவடி தாளில்
கலந்து மயமாகி விடுகிறான். வேறு
ஸ்ரீபகவன் நாமாவை விட்டால், பக்தனுக்கு இல்லை.
பக்தனின் திருவடித் தாளினை விட்டால், ஸ்ரீபகவானுக்கு
இருப்பும் / இறப்பும் இல்லை என்பதே லக்ஷியம்




ஸ்ரீபகவானின் 98
இரும்பும்
இயக்கமும்! சிறப்பும்!
ஓர் உ ண் மை
பக்தனின் ஸ்ரீ பா த
தா ஸி யே ஆகும்.
ஆகவே ஸ்ரீபகவானுக்கு ரூபம்
இல்லை என்பதும் நாமம் மட்டும் உண்டென்
பதும் ஸத்தியமே.

ஆகவே, ஓர் பக்தன் வாக்கை காப்பதற்கு,
ஸ்ரீபகவான்! கண்கள் காக்கும் இமையாவது, சற்று
தாமதம் செய்யும். ஆனால் ஓர் பக்தனை காக்க,
ஸ்ரீபகவான் அது!அது!அது!அது! கருணையு
வேகமாக செயலாற்றுவான்
முன்நின்று அழிக்கிறான்! என உணர்க.

ஆனால் ஓர் உண்மை என்னவென்றால்?

ஓர் உண்மை! பக்தனிடம் சாமான்ய
மாக
வாக்கு! வராது என்பதே ஸத்தியம்.

பக்குவ ஆன்மாக்களின், த ன் ந வ ம ற் ற
ஸ்ரீபாகவத தர்ம உருக்க ஏக்கத்தினால்,
வாக்கை ஸ்ரீபகவானே! கருணையோடு
பக்தனின் வாக்காக வரவழைத்து,
ஸ்ரீபகவானே! தம்மாயாவினால், செய்து
முடிக்கிறான்.
தெய்வ வாக்கு பொய்யாகாவாம். மொழி ஆகும்.



ஆகவேதான்
ஸ்ரீ பாகு! 99
நிமலீகாரம். உயர்ந்த பக்தி நிஷ்டையும் உணர்ந்த ஞா ன நிஷ்டையும் அன்பும்! இன்பமும்! என்றென்றும்! ஸ்ரீமஹான்களால் அனுஷ்டிக்கப்படுகிறது.

ஆனால் ஒரு பக்தன் ஆகிறது! பொய்யாகாது. பொய்யாக, ஸ்ரீபகவான் விடமாட்டான். இதன் காரணம் ஸ்ரீபகவானுக்கு **நாமம்!** ஒன்றே மந்திரம்! அவனுடைய **திருப்புமு! இயக்கமும்!** அவனுடைய பக்தனுடையதாகும்! என ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம்.

இவைகளை வைத்து உணருமிடத்து, மாந்தாதா! என்னும் பெண்மணி! ஸ்ரீ பாகவத தர்மத்தில், மேலோங்கி இருந்தார். அதேநேரம் ஸ்ரீபதிதர்மத்திலும், முழுமையாக இருந்தார். இவ்விரண்டுமே, மாயனை! உடைய ஸ்ரீபகவானுக்கே இரு நேத்திரம் ஆகும் என ஸ்ரீமஹான்கள் சொல்வர். காரணம் என்னவென்றால்? **ஸத்தியதர்மத்தாலேயே!** ஸ்ரீபகவான் விளங்குகின்றான் துலங்குகின்றான்.



1 வது கேள்வியில் வருவது ஓர் ஸத்குரு வாக்கானை யோக மா யா சம்பந்தம் கொண்டதாகும் (100)


2 வது கேள்வியில் வருவது ஓர் பாகவ தோத்தமனின் வாக்காக வருவது யோகமாயா சம்பந்தம் கொண்டதாகும்

ஆகவே அவர் செய்த இரு தர்மங்களும்! அவருக்கு கை கொடுத்து உதவின என்றே சொல்ல வேண்டும். ஆகவே அவருடைய பிராப்தம்! என்ற விதி யின்படி புத்திர சந்தானம்! அச்சன்மா வில் இல்லை. இவர் இரு தர்மங்களும்! அவ் விதியை சற்று மாற்றி அமைத்தது. எப்படி என்றால்? பின்னர் கிடைக்க வேண்டிய, புத்திர சந்தானத்தை இச்சன்மாவிலேயே, கிடைக்க ஓர் பக்தோத்தம நாதரை வரவழைத்து, அவர் உபகாரத்தைப் பெற்றுக் கொண்டு, புத்திர சந்தானம் வாங்கி! ஆசி நிதியால், வழங்கி கருணையின் நிதியில் கொட்டித்தது என, உணர வேண்டும்

இதன் நிதி எப்படி என்றால்? முந்தையது யோக மாயாவால் ஓர் ஸத்குரு நிதியால் நடத்தி முடித்தது. பிந்தையது யோக மாயாவால், ஓர் பக்தோத்தமர் நிதியால் நடத்தி முடித்தது. என உணர்க.

இருப்பது ஒன்றே நடப்பது அவனே.

பாமரா


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!